12.02.2026

Ele.OP No.164/2022

**எம.சா.2 – சௌந்தர்ராஜன்**

**<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

நான் பழைய SSLC படித்துள்ளேன். தேர்தல் 19.2.2022ம் தேதியில் நடைபெற்றது என்றால் சரிதான். என்னுடைய வேட்பு மனுவுடன் படிவம் 3A தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த படிவத்தில் என்மீது நிலுவையில் உள்ள வழக்குகள் மற்றும் தண்டனை பெற்ற விவரங்கள் கேட்டுள்ளார்கள் என்றால் சரிதான். CC 125/2021 என்ற வழக்கின் தீர்ப்பு நகலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை 2020ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான், ஆனால் பதிவு செய்த விவரம் எனக்கு தெரியாது. வினோத் என்பவர் என்னுடைய மகன். அவரும் அந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கில் என் மகன் மாவட்ட நீதிமன்றத்தில் முன்பிணை மனு தாக்கல் செய்து உத்தரவு பெற்றுள்ளார் என்றால் அதை நான் தாக்கல் செய்யவில்லை, என் மகன் தாக்கல் செய்ததால் எனக்கு தெரியாது. குற்ற வழக்கில் என் பெயர் உள்ளது என்ற விவரம் அந்த சமயத்திலே தெரியும் என்றாலும், இந்த வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1992ம் வருடத்தில் மேட்டுப்பாளையத்தை சேர்ந்த ராஜேந்திரன் என்பவர் கொடுத்த புகாரின் பேரில் அமர்வு நீதிமன்றத்தில் என்மீது வழக்கு நடந்தது என்றால் சரிதான். அந்த வழக்கானது கொலை

முயற்சி மற்றும் வெடிமருந்து பயன்படுத்துதல் தடை சட்டத்தின் கீழும் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் எனக்கு அமர்வு நீதிமன்றம் தண்டனை வழங்கியது என்றால் சரியல்ல. அந்த தண்டனையை எதிர்த்து நான் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு மேல்முறையீடு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் இல்லை. நான் தேர்தல் ஆணையத்திடம் மட்டுமல்லாமல் தற்போது நீதிமன்றத்திலும் நான் தண்டனை பெற்று அதன் பிறகு மேல்முறையீடு செய்து விடுதலை பெற்றேன் என்ற விவரத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி குற்ற வழக்குகள் நிலுவையில் இருந்தது குறித்தும், தண்டனை வழங்கியது குறித்தும், பின்னர் விடுதலை செய்யப்பட்டது குறித்தும் நான் படிவம் 3A ல் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, எனக்கு அந்த சமயத்தில் எந்த ஒரு வழக்கும் நிலுவையில் இல்லை, என்மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை பற்றிய விவரம் கொரனா காலம் என்பதால் எனக்கு தெரியவில்லை. தவறான தகவல்களுடன் 3A படிவம் தாக்கல் செய்து அதன்படி தேர்தலில் வெற்றி பெற்றது செல்லாது என்று சொன்னால் சரியல்ல. எனவே என்னுடைய வெற்றி செல்லாது என்று அறிவிக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை :**</u> இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M

Digitally signed by CHRISTOPHER M
Date: 2026.02.12 17:56:54 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.